## செலவு கணக்கில் வராத ரூ.54,282 கோடி முறைகேடு!

# ஒன்றிய பா.ஜ.க. அரசின் ஊழல் அம்பலம்!

### 15 அமைச்சகங்கள் செலவுக்குரிய ஆவணங்களை வழங்க முடியாமல் தவிப்பு!

புதுடெல்லி, ஏப். 27 - செலவு கணக்கில் வராமல் ரூ.54,282 கோடி நிதி முறைகேடு செய்யப்பட்டிருப்பதாக சி.ஏ.ஜி. அறிக்கை மூலம் ஒன்றிய பா.ஜ. அரசின் வெளிப்படைத்தன்மையற்ற நிர்வாகத்தின் ஊழல் அம்பலமாகி உள்ளது. 15 அமைச்சகங்கள் செய்த செலவுக்கு உரிய ஆவணங்களை வழங்க முடியாமல் தவிப்பதும் தெரியவந்துள்ளது. கடந்த 2025 மார்ச்சுடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான நிதி தணிக்கை அறிக்கையை இந்திய தலைமை கணக்கு தணிக்கையாளர் (சி.ஏ.ஜி.) சார்பில் நாடாளுமன்றத்தில் சமீபத்தில் தாக்கல் செய்யப்பட்டது.

இதில், ஒன்றிய அரசின் கணக்குகளில் ரூ.54,282.32 கோடி நிதி கணக்கில் வராத செலவினமாக இருப்பதாக கூறப்பட்டுள்ளது. 15 அமைச்சகங்கள் மற்றும் துறைகள் மொத்தம் 33,973 பயன்பாட்டுச் சான்றிதழ்களை வழங்காமல் நிலுவையில் வைத்திருப்பதாக கூறப்பட்டுள்ளது. இந்த சான்றிதழ்கள் வழங்கப்படாததால் ஒதுக்கப்பட்ட நிதி திட்டமிட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டதா என்பதை உறுதிபடுத்தி முடியவில்லை என சி.ஏ.ஜி. அறிக்கை கூறுகிறது.

இதில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற விவகார அமைச்சகம் அதிகபட்சமாக ரூ.18,272.91 கோடி நிலுவைத் தொகையை வைத்துள்ளது.

உயர்கல்வித் துறை ரூ.14,359.76 கோடி செலவுக்கான கணக்கை இன்னும் தாக்கல் செய்யாமல் உள்ளது. நிலுவையில் உள்ள தொகையில் ரூ.38,287.52 கோடி கடந்த 3 நிதியாண்டுகளுக்கு உரியது. இது தவிர, ரூ12,754.47 கோடி மதிப்பிலான செலவினங்கள் தவறான கணக்கு தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் சி.ஏ.ஜி. அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. உதாரணமாக அணுசக்தி துறை ரூ.3,089.97 கோடி வருவாய் செலவினங்களை செய்து, அவற்றை மூலதன தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. இது கடுமையான தடை செய்யப்பட்ட நடவடிக்கை என சி.ஏ.ஜி. சுட்டிக்காட்டி உள்ளது.

மேலும், ரூ.4,011.91 கோடி மதிப்பிலான வரவுகளிலும் முறைகேடுகள் கண்டறியப்பட்டுள்ளன. அவை தவறான வரி வருவாயக வகைப்படுத்தப்பட்டுள்ளன. இத்தகைய தவறுகள் அரசின் உண்மையான நிதி நிலைக்கு எதிரான பார்வையை அளிப்பதாக சி.ஏ.ஜி. அறிக்கை எச்சரித்துள்ளது. அரசு வசூலித்த வரிகள் மற்றும் செஸ் வரியிலிருந்து ரூ.9,222 கோடி நிதி, கல்வி, சுகாதாரம் போன்ற குறிப்பிட்ட ஒதுக்கீடு செய்யப்பட்ட நோக்கங்களுக்கு இன்னமும் மாற்றப்படவில்லை என கூறப்பட்டுள்ளது. எந்த நோக்கத்திற்கு செலவு செய்யப்பட்டது என்பதை மறைக்கும் வகையில் 50 சதவீதத்திற்கும் அதிகமான செலவினங்கள் இதர வரவு செலவுக்கான மைனர் ஹெட் 800 என்ற பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளது. இப்பிரிவு ஒரு முதன்மை பதிவுப் பிரிவாக மாற்றப்பட்டுள்ளது.

வெளியுறவு துறை அமைச்சகத்தில் ரூ.44,714.77 கோடி தவறான பரிமாற்ற பதிவால் பாதகமான இருப்பு ஏற்பட்டுள்ளதாகவும் சி.ஏ.ஜி. கூறுகிறது. ரிசர்வ் வங்கியுடன் ஒப்பிடுகையில், ஒன்றிய அரசின் கணக்குகளில் ரூ.3,880.67 கோடி ரொக்க இருப்பு இன்னும் சரிபார்க்கப்படாமல் இருப்பதாகவும் சி.ஏ.ஜி. கூறி உள்ளது. செலவு செய்த நிதிக்கு 15 அமைச்சகங்கள் கணக்கு தராமல் இருப்பதன் மூலம் ரூ.54 ஆயிரம் கோடி ஊழல் செய்யப்பட்டிருப்பதாகவும், பொதுமக்களின் வரிப் பணத்தை கையாள்வதில் ஒன்றிய அரசு பொறுப்பற்ற முறையில் இருப்பதாகவும் எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டி உள்ளன. இது தொடர்பாக நாடாளுமன்றத்தின் பொது கணக்கு குழு விரிவான விசாரணை நடத்தவும் வலியுறுத்தி உள்ளன.

இவ்வளவு பெரிய தொகைக்கு பயன்பாட்டு சான்றிதழ்கள் வழங்கப்படாமல் இருப்பதும், தவறான வகைப்பாட்டில் இருப்பதும் பட்ஜெட் தாக்கலையே தவறாக காட்டக் கூடும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். இது, ஒன்றிய அரசின் நிதி நிர்வாகத்தை ஒழுங்குபடுத்துவதற்கான எச்சரிக்கை மணியாக பார்க்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தி உள்ளனர்.

# ரயில்வேயில் ஆட்குறைப்பு நடவடிக்கை கூடாது!

### இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் கண்டனம்!



சென்னை, ஏப். 27- இந்திய ரயில்வேயில் மொத்தப்பணியிடங்களில் இரண்டு விழுக்காடு பணியாளர்களை குறைக்க ரயில்வே நிர்வாகம் முடிவு செய்துள்ளதாக செய்திகள் வந்துள்ள நிலையில், இத்தகைய ஆட்குறைப்பு நடவடிக்கைகளை ரயில்வே மேற்கொள்ளக்கூடாது என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இது குறித்து அக்கட்சியின் மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“இந்திய ரயில்வேயில் மொத்தமுள்ள பணியிடங்கள் 12 லட்சத்து 80 ஆயிரமாகும். இதில் இரண்டு விழுக்காடு பணியாளர்களை அதாவது 29 ஆயிரத்து 608 பணியாளர்களை குறைக்க ரயில்வே நிர்வாகம் முடிவு செய்துள்ளதாக செய்திகள் வெளிவந்துள்ளன. இது மக்கள் நலனுக்கு எதிரானது. இத் தொழிலாளர் விரோதப் போக்கு கடும் கண்டனத்திற்குரியது.

இந்த ஆட்குறைப்பு நடவடிக்கையால், தெற்கு ரயில்வேயில் மட்டும் ஏறத்தாழ 2,000 பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட உள்ளனர். இது ரயில் பயணிகளின் பாதுகாப்பை கேள்விக்குறியாக்கும். விபத்துகளை தடுக்க உதவாது.

இந்தியாவில் நாள்தோறும் 13 ஆயிரத்து 17 ரயில்கள் உட்பட தினசரி 22 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ரயில்கள் இயக்கப்படுகின்றன. அதற்கேற்ப புதிய பணியிடங்களை உருவாக்கி, நிரந்தர அடிப்படையில் பணியாளர்களை நியமிப்பதற்கு பதிலாக பணி குறைப்பு மேற்கொள்வது என்பது சரியல்ல.

ஆண்டுக்கு இரண்டு கோடி வேலை வாய்ப்பு உருவாக்கப்படும் என வாக்குறுதி வழங்கிய ஒன்றிய பாஜக அரசு, தற்பொழுது ரயில்வே துறையில் ஆட்குறைப்பு நடவடிக்கை மேற்கொள்வதும், வேலை வாய்ப்புகளை ஒழித்துக் கட்டுவதும் அளித்த வாக்குறுதிக்கு நேர் எதிரானதாகும்.

இன்று இந்தியா எதிர்கொள்ளும்முதன்மையான பிரச்சினை வேலையில்லா திண்டாட்டமாகும். இது இளைஞர்கள் மத்தியில் கடும் அதிருப்தியையும், விரக்தியையும், கோபத்தையும் உருவாக்கி உள்ளது.

வேலையில்லா திண்டாட்டத்தால், மது, போதைப் பழக்கம், கொலை, கொள்ளை, தற்கொலைகள், வன்முறைகள் உள்ளிட்ட சமூகச் சீர்கேடுகள் அதிகரித்துள்ளன.

வேலையில்லா திண்டாட்டத்தை போக்குவதில் கவனம் செலுத்தாத ஒன்றிய பாஜக அரசு, ஆட்குறைப்பு நடவடிக்கையில் ஈடுபடுவது நாட்டின் இளைய தலைமுறையினரின் நலன்களுக்கும், அனைவருக்குமான பொருளாதார வளர்ச்சிக்கும் எதிரானதாகும்.

இந்த ஆட் குறைப்பு நடவடிக்கையை உடனடியாக கைவிடுவது மட்டுமல்லாமல், தற்காலிக அடிப்படையில், ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றும் அனைத்து ரயில்வே பணியாளர்களுக்கும் பணி நிரந்தரம் வழங்கிட வேண்டும். புதிய பணியிடங்களை உருவாக்கி நிரந்தர அடிப்படையில் பணி நியமனம் செய்திட வேண்டும். ரயில்வேயை படிப்படியாக தனியார்மயமாக்கும் முயற்சிகளை கைவிட வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநிலக் குழு ஒன்றிய பாஜக அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறது” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஆந்திராவில் பெட்ரோல், டீசல் தட்டுப்பாடு!

அமராவதி, ஏப். 27- ஆந்திராவில் கடந்த ஒரு வாரமாக பெட்ரோல், டீசலுக்கு தட்டுப்பாடு நிலவுகிறது. குறிப்பாக டீசல் தட்டுப்பாடு அதிகரித்து வருகிறது. இதனால் கனரக வாகன போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. சில இடங்களில் பெட்ரோல் நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

இது தொடர்பாக ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடு நேற்று முக்கிய ஆலோசனை நடத்தினார். தலைமை செயலர் சாய்பிரசாத் மற்றும் மூத்த அதிகாரிகள், அமைச்சர்களுடன் அமராவதியில் அவர் அவசர ஆலோசனை நடத்தினார். சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களுடன் கலந்தாலோசித்து உடனடியாக பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு முதல்வர் உத்தரவிட்டார்.

# பா.ஜ.க.வில் இணைந்த ராகவ் சத்தா எம்.பி.க்கு இன்ஸ்டாவில் 10 லட்சம் பேர் எதிர்ப்பு!

புது டெல்லி,ஏப்.27- ஆம் ஆத்மி கட்சியிலிருந்து விலகி பாஜகவில் இணைந்த மாநிலங்களவை எம்.பி ராகவ் சத்தா கடந்த 24 மணி நேரத்திற்குள் இன்ஸ்டாகிராமில் 10 லட்சம் ஃபாலோயர்ஸை இழந்துள்ளார்.

ஆம் ஆத்மி கட்சியின் ஆறு மாநிலங்களவை எம்.பிக்களுடன் ராகவ் சத்தா ஆம் ஆத்மி கட்சியிலிருந்து விலகி பாஜகவில் இணைந்த நிலையில், சமூக ஊடகத்தில் அவரின் செல்வாக்கு சரிந்துள்ளதாக தெரிகிறது. சில வாரங்களுக்கு முன்பு ஆம் ஆத்மி கட்சியின் ராஜ்யசபா துணைத் தலைவர் பதவியிலிருந்து ராகவ் சத்தா நீக்கப்பட்ட பிறகு, நேற்று அவர் பாஜகவில் இணைந்தார். அவரின் இந்த அரசியல் நிலைப்பாடு ஜென்ஸி தலைமுறையினரைக் கவரவில்லை என்று தெரிகிறது.

ராகவ் சத்தா பாஜகவில் இணைந்த 24 மணி நேரத்திற்குள் இன்ஸ்டாகிராமில் சுமார் பத்து லட்சம் ஃபாலோயர்களை இழந்துள்ளார். வெள்ளிக்கிழமை அன்று, இன்ஸ்டாகிராமில் ராகவ் சத்தாவிற்கு 1.46 கோடி ஃபாலோயர்கள் இருந்தனர். சனிக்கிழமை மதியம் 1 மணிக்கு, அவரது ஃபாலோயர்களின் எண்ணிக்கை 1.35 கோடியாகக் குறைந்தது.

ராகவ் சத்தாவுக்கு எதிராக இன்ஸ்டாகிராமில் ‘பின்தொடர்வதை நிறுத்து’ என ஜென் ஸி தலைமுறையினர் மேற்கொண்ட பிரச்சாரம், 24 மணி நேரத்தில் அவரின் பின் தொடர்பவர்களின் எண்ணிக்கை 10 லட்சம் குறைய வழிவகுத்துள்ளது என்று என்சிபி (எஸ்பி) செய்தித் தொடர்பாளர் அனிஷ் கவாண்டே ட்வீட் செய்துள்ளார். “இணையம் ஒரே இரவில் உங்களை ஒரு கதாநாயகனாக மாற்ற முடியும். அதே இணையம் ஒரே இரவில் உங்களை பூஜ்ஜியத்திற்கும் கொண்டு செல்ல முடியும்” என்று அவர் கூறினார்.

“unfollowRaghavChadha” என்ற ஹேஷ்டேக் சமூக ஊடகங்கள் வேகமாக பகிரப்பட்டு வருகிறது. இந்தச் சூழலில், பிரதமர் நரேந்திர மோடி மற்றும் பாஜகவை விமர்சிக்கும் தனது பழைய பதிவுகளை ராகவ் சத்தா நீக்கிவிட்டதாகவும் பலர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## சமூகநீதியை ஒழிக்கத் திட்டம்!

# ரயில்வேயில் ஆட்குறைப்பு போராட்டத்தின் தொடக்கம்!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி கண்டன அறிக்கை!



சென்னை, ஏப். 27- 2 சதவிகித பணியிடக் குறைப்பு என்பது தனியார் மயமாக்கலின் முன்னெடுப்பே! சமூக நீதியை மறைமுகமாக ஒழிப்பதே ஒன்றிய பா.ஜ.க. அரசின் உள்ளார்ந்த நோக்கம்! ரயில்வே துறையில் ஆட்குறைப்பு நடவடிக்கை பேராபத்தின் தொடக்கம்! இதனை முளையிலேயே தடுப்பது நமது முதல் கடமை என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் அறிக்கை விடுத்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

நடப்பு ஆண்டில் நாடு முழுவதும் 29,908 பணியிடங்களை ரத்து செய்யுமாறு, பல்வேறு மண்டலங்களின் பொது மேலாளர்களுக்கு இந்திய ரயில்வே வாரியம் உத்தரவிட்டுள்ளது. இதில் வடக்கு ரயில்வேயில் அதிகபட்சமாக 3,303 பணியிடங்களும், தெற்கு ரயில்வேயில் 1,906 பணியிடங்களும் ரத்து செய்யப்படவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

‘‘பாதுகாப்பு சாராத’’ (nonsafety) பிரிவுப் பணிகளையே குறைக்கப் போகிறோம் என்பதாகச் சொல்கிறார்கள். ரயில்வே மருத்துவமனைகள், தூய்மைப் பணிகள் (housekeeping), ஏசி இயந்திரப் பராமரிப்பு மற்றும் மின்சாரப் பிரிவுகள் ஆகியவற்றிலேயே இந்தப் பணியாளர் பற்றாக்குறை மிகவும் கடுமையாக உள்ளது.

#### புதிய ஆள்சேர்ப்பு எதுவும் நடைபெறாது!

அனுமதிக்கப்பட்ட மொத்தப் பணியாளர் எண்ணிக்கையில் 2 சதவீதத்தை ரத்து செய்யுமாறு ஒவ்வொரு பொது மேலாளருக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாம். தற்போது நிரந்தரப் பணியாளர்களாக இருப்பவர்கள் தங்கள் வேலைகளை இழக்க மாட்டார்கள் என்றாலும், ரத்து செய்யப்பட்ட இந்தப் பணியிடங்களுக்குப் புதிய ஆள்சேர்ப்பு எதுவும் நடைபெறாது. உதாரணமாக, தட்டச்சர்கள் போன்ற தேவையற்றதாகக் கருதப்படும் பணிகளில் உள்ள ஊழியர்கள், எழுத்தர்களாகப் பணியிட மாற்றம் செய்யப்படுவார்கள் என்று ஊடகங்களின் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேலும், அதிகாரப்பூர்வமாகப் பணியிடங்கள் குறைக்கப்படாத ‘பாதுகாப்புப் பிரிவு’களில் கூட, ஓய்வுபெறும் ஊழியர்களின் எண்ணிக்கைக்கு ஈடாகப் புதிய நியமனங்கள் நடைபெறவில்லை என்று தொழிற்சங்கங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

#### ஆள்குறைப்பு செய்வதற்கான தொடக்கம் இது!

ரயில்வேயில் கடந்த ஏப்ரல் 1, 2026 நிலவரப்படி, 14 லட்சத்து 80 ஆயிரத்து 455 பணியிடங்கள் உள்ளன. ரயில்வேயில் அங்கீகரிக்கப்பட்டுள்ள இந்த 14.8 லட்சம் பணியிடங்களில், தற்போது 11 லட்சம் பணியிடங்கள் மட்டுமே நிரப்பப் பட்டுள்ளன. அதிலேயே இன்னும் 3 லட்சம் பணியிடங்களுக்கான வேலைவாய்ப்பு இருந்தும், அவற்றுக்கான ஊழியர்களை நியமிக்காமல் இருக்கிறது இந்திய ரயில்வே வாரியம். இப்படி ஏற்கெனவே கடுமையான பணியாளர் பற்றாக்குறை நிலவி வரும் சூழலில், சுமார் 30,000 பணியிடங்களையே இல்லாதொழிக்கும் இந்த நடவடிக்கை நிச்சயமாக இத்துடன் நிற்காது; தொடர்ந்து இப்படிச் செய்வதற்கான முன்னோட்டம்.

அதுவும் ரயில்வே துறையில் மட்டும் இப்படி நடக்கும் என்று சொல்வதற்கில்லை எல்லா அரசுத் துறைகளிலும் இதே போன்ற ஆள்குறைப்பு செய்வதற்கான தொடக்கம் இது! ஒருபோதும் இதனை நாம் ஏற்க முடியாது. கடும் கண்டனத்திற்குரியது.

இதற்குப் பின்னால், ரயில்வே துறையைத் தனியார் மயமாக்குவதற்கான சூழ்ச்சி நிறைந்துள்ளது. அது மட்டுமல்லாமல், நிரந்தரப் பணியிடங்களை ஒழித்து, தற்காலிகப் பணிகளாக அவற்றை மாற்றும் நடவடிக்கையின் ஆரம்பம் தான் இந்த ஆட்குறைப்பு!

இந்தியா முழுவதும் புதிய ரயில் பாதைகளும், ரயில்களும் அறிமுகப்படுத்தப்படுவதாகத் தம்பட்டம் அடிக்கிறார் பிரதமர் மோடி. நேரில் சென்று ரயில் நிலையங்களைத் திறப்பதும், ரயில்களைக் கொடி அசைத்துத் தொடங்கிவைப்பதும் தான் அதிகபட்சமாக அவர் பங்கேற்கும் அரசியல் பிரச்சாரங்கள் அல்லாத மக்களுக்கான பணிகளைத் தொடங்கிவைக்கும் அரசு நிகழ்ச்சிகள். அவர்களின் சொல்படியே அதிகம் பணிகள் நடக்கும் ரயில்வே துறையில், கூடுதல் பணியாளர்களின் தேவை அதிகரித்துள்ள இத்தருணத்தில், பணியிடங்களை மொத்தமாக ரத்து செய்வது ஒன்றிய அரசின் தனியார்மயமாக்கல் நோக்கத்தை விரைவுபடுத்தும் ஒரு தெளிவான அறிகுறி!

#### நோக்கத்தை பா.ஜ.க. வெளிப்படுத்திவிட்டது!

ஏசி பெட்டிகளின் பராமரிப்பு மற்றும் ரயில் பெட்டிகளின் (rake) பழுதுபார்ப்புப் போன்ற பணிகள் தனியார் ஒப்பந்ததாரர்களிடம் அதிகளவில் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன; ரயில் நிலையப் பராமரிப்பு, கடைகள் குத்தகை என்று அதானி உள்ளிட்ட பெருநிறுவனங்கள் வசம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றன. அதானி தனியாக 300 கிமீ நீளத்திற்கு தனியார் ரயில்வே பாதையை அமைத்திருக்கிறார். படிப்படியாக இந்தியா முழுமையையும் இணைக்கும் மிகப் பெரிய பொதுத் துறை நிறுவனமான இந்திய ரயில்வேயைத் தனியார் கைகளில் ஒப்படைத்துவிட வேண்டும் என்பது மோடி பதவியேற்ற காலத்திலிருந்தே அவர்களின் நோக்கமாகும். மக்கள் நலனை விட, பெருமுதலாளிகளின் நலனே ஆர்.எஸ்.எஸ் பா.ஜ.க. மோடி அரசின் நோக்கம். ரயில்வே பட்ஜெட்டை ஒழித்த போதே, தங்கள் நோக்கத்தை பா.ஜ.க. வெளிப்படுத்திவிட்டது.

தனியார் மயமாக்கல் என்பதும், பணியிடக் குறைப்பு என்பதும் சமூக நீதி அடிப்படையிலும் மிகப் பெரிய ஆபத்தாகும். மண்டல் அறிக்கை அமல்படுத்தப்பட்டு, பிற்படுத்தப்பட்டோருக்கான வேலை வாய்ப்புகள் உருவாகத் தொடங்கிய பின்னர், தனியார் மயமாக்கலை நோக்கி எல்லா நிறுவனங்களையும் நகர்த்தத் தொடங்கினர் அதிகாரத்திலும், திட்டமிடலிலும் உள்ள பார்ப்பனர்கள்!

#### சமூகநீதியை ஒழிப்பதே நோக்கம்!

பார்ப்பன ஆதிக்கக் கோட்டையாக இருந்த ஒன்றிய அரசுப் பணியிடங்களில் 27% இடஒதுக்கீடு வழங்கப்பட்டு, பிற்படுத்தப்பட்டோர் பெருமளவில் உள்ளே நுழைவதும், படிப்படியாகக் கல்வி வளர்ச்சி காரணமாக 22.5% பட்டியல் சமூகத்தினர், பழங்குடியினர் நுழைவு அதிகமாவதும் அவர்களால் பொறுத்துக் கொள்ளப்பட முடியாததானது. நேரடியாக இடஒதுக்கீட்டைக் குறைக்க முடியாது என்பதால், சமூகநீதியை மறைமுகமாக ஒழிப்பதே அவர்களின் உள்ளார்ந்த நோக்கம். அதன் வெளிப்பாடுகள் தான் வாஜ்பாயி காலத்தில் தனியாகவே, பொதுத் துறை நிறுவனங்களைத் தனியாருக்கு விற்பதற்கென்றே உருவாக்கப்பட்ட அமைச்சகம். அந்த வெளிப்படைத் தன்மையும் இல்லாமல், அதை நிதியமைச்சகத்தின் ஒரு பிரிவாக ‘பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் முதலீடுகளை நிர்வகிக்கும் துறை’ என்று ஆக்கி, அதே வேலையை இன்னும் வேகமாகச் செய்து கொண்டிருக்கிறது மோடி அரசு.

ஓர் ஆண்டுக்கு இரண்டு கோடி வேலைவாய்ப்புகளை உருவாக்குவோம் என்று உறுதிமொழி கொடுத்து ஆட்சிக்கு வந்த மோடி, இந்நேரம் 24 கோடி வேலை வாய்ப்புகளை உருவாக்கியிருக்க வேண்டும். மாறாக, வேலைவாய்ப்பை ஒழிக்கும் பணியையே மும்முரமாகச் செய்கிறது அவரது அரசு. வழக்கம்போல இந்த உறுதிமொழியும் ‘ஜுமலா’ ஆயிற்று.

#### நமது முதல் கடமை!

ரயில்வே துறையில் தொடங்கும் இச்சூழ்ச்சியைத் தடுத்து நிறுத்தாவிட்டால், இது பெருவெள்ளமாகி, அரசுப் பணிகள் அனைத்தையும் கபளீகரம் செய்துவிடும். இதனைத் தடுப்பது தொழிற்சங்கங்களும், சமூகநீதி உணர்வாளர்களும் இணைந்து களம் காண வேண்டும். தொடக்கத்திலேயே இது தடுத்து நிறுத்தப்பட வேண்டும். இளைஞர்களின் வேலை வாய்ப்பைப் பறிப்பது இந்தியப் பொருளாதாரத்தை மேலும் அதலபாதாளத்திற்கு இட்டுச் செல்லும்! வாய் ஜம்பங்களும், தம் பட்டங்களும் நாட்டுக்குப் பயன்படாது.

இவ்வாறு கி.வீரமணி அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எம். கோபாலகிருஷ்ணன்

**ஏப்ரல் 27 (2009)**



திருச்சி மாவட்டம், மணப்பாறை நகரத்தில், கழக வளர்ச்சிக்கு பாடுபட்டவர்களில் இவரும் ஒருவர்.

பத்தாண்டுகளுக்கும் மேலாக நகரக் கழகச் செயலாளராகவும், நகர்மன்ற உறுப்பினராகவும், பின்னர் துணைத் தலைவராகவும், இரு முறை நகர்மன்றத் தலைவராகவும் பணியாற்றி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

தலைமைக் கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர். குறிப்பாக, 1965ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.